**சுருக்கம்.**

சுகாதாரம் – தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிகளை மேற்கொள்ளுதல், திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் அதன் உபயோகத்தை கண்காணித்தல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(மஅதி.1) துறை**

**அரசாணை(நிலை) எண்.46** **நாள் 26.03.2015.**

**படிக்கப்பட்டவை:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடித எண். 682/2014/NBA–1, நாள்: 5.3.2015.

* * * * *

**ஆணை:**

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே சிறப்பாக தமிழ்நாடு பெறவேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன் முக்கிய நோக்கமாகும். திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை முற்றிலும் ஒழிக்க அனைத்து பங்கேற்பாளர்களையும் கொண்ட ஒரு பல்முனை அணுகுமுறையின் வாயிலாக, திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கம் அற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற்றப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2015–16–ம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் 2015–16–ம் ஆண்டில் 15 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

2. இது தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

**தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல்:**

மத்திய அரசினால் 1999ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முழு சுகாதார திட்டத்தில், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் ஒரு முக்கிய கூறாகும். முழு சுகாதார திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே, 2011–12ம் ஆண்டு வரை, ரூ.500/– முதல் ரூ.3,200/– வரை ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வந்தது. 2012–ம் ஆண்டில், முழு சுகாதார திட்டம், நிர்மல் பாரத் அபியான் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது, தூய்மை

பாரத இயக்கம் (ஊரகம்) என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 16.03.2015ன்படி, தற்போது தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.12,000/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.5, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை, நாள் 19.01.2015ன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழும் ரூ.12,000/–மதிப்பீட்டில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படும்.

## திட்டம் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள்

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் கழிப்பறைகள் கட்டுவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் ஊரகப் பகுதிகளில், தனிநபர் இல்லங்களில் கழிப்பறைகள் கட்டுவதற்கான தேவையினை உருவாக்குதல் (Demand generation) மிகுந்த சவாலாக உள்ளது. கழிப்பறைகள் கட்டவும், அவற்றை தொடர்ந்து உபயோகப்படுத்தவும், இலக்கீடு சார்ந்த அணுகுமுறை வெற்றியளிக்கவில்லை. எனவே, திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கத்திலிருந்து, கழிப்பறைகளை உபயோகப்படுத்த தேவையான பழக்க மாற்றத்தை (Behavioural Change) உருவாக்குவதே மிகப்பெரிய சவாலாக உள்ளது.

## 2015–16ம் ஆண்டில் தனி நபர் இல்லக்கழிப்பறை கட்டுவதற்கான திட்டம்

2015–16ம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் 2015–16ம் ஆண்டு அனைத்து 31 ஊரக மாவட்டங்களிலும் 15 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள், அதாவது, தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் 7.71 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகளும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 7.34 இலட்சம் கழிப்பறைகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தனிநபர் இல்லக் கழிப்பறை – கிராம ஊராட்சி அளவில் திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், ஒவ்வொரு கிராம அளவிலும், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவது குறித்து, திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் அவசியமாகிறது. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி எண். 9.1ல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஆதரவு அமைப்பாக, (Support Organization) சமூகம் சார்ந்த அமைப்புகள் (Community Based Organisation) / சுய உதவிக் குழுக்கள் (Self Help Groups) போன்றவற்றை ஈடுபடுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கிராம ஊராட்சி அளவில் செயல்பட்டு வரும் சமூகம் சார்ந்த அமைப்புகளாக கருதப்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (Village Poverty Reduction Committee) மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, (Panchayat Level Federation) ஆகியவை, தங்களின் இயல்பான பணியின் தன்மை காரணமாகவும் மற்றும் சமூக பிரதிநிதி என்கிற அடிப்படையிலும் ஒரு சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற கிராமங்களை உருவாக்குவதற்கான நோக்கத்தினை அடைய, கழிப்பறை கட்டப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அதனை உபயோகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உணர வைக்கும் பொருட்டு, நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களுடைய செல்வாக்கினை அதிக அளவில் பயன்படுத்தி திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை முற்றிலும் ஒழிப்பது சாத்தியமாகும். எனவே, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி

அளவிலான கூட்டமைப்பை கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்தினரும் கழிப்பறை கட்டுவதற்கு ஊக்குவிக்கவும், அதனை கட்டுவதற்கு தேவையான உதவிகளை செய்வதற்கு பொறுப்பாக்குவதுடன், மேலும் அத்தகைய பொறுப்புகளை பயனுள்ளவாறு நிறைவேற்றுவதற்கு ஒரு சமுதாய வல்லுநர் (சுகாதாரம்) / சமுதாய பயிற்றுநர் (சுகாதாரம்) ஆகியோரை ஈடுபடுத்திடவும் அவர்களுக்கு அனுமதி அளிக்கலாம்.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை ஒழிக்கும் விதமாகவும், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்தினை செயல்படுத்த, களப்பணியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு வழிகாட்டும் விதமாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை முன்மொழிந்துள்ளார்.

**ஊரக வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு ஊக்க நிதி வழங்குதல் மற்றும் நேர்முக தகவல் பரிமாற்றத்திற்கான (Inter-Personal Communication) நிதி ஒதுக்கீடு செய்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட ஊக்குவிப்பவர்களுக்கு வழங்குவதற்கான ஊக்க நிதியினை தகவல், கல்வி மற்றும் தொடர்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்வதற்கு வழிவகை உள்ளதாக தெரிவித்துள்ளார். திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட ஊக்கப்படுத்துவதற்கும், கட்டுவதற்கும், கட்டப்பட்ட கழிப்பறைகள் பயன்பாட்டில் உள்ளதற்கும் வழங்கப்படவேண்டிய ஊக்கத் தொகையின் அளவை நிர்ணயம் செய்ய மாநில அரசுகளுக்கு உரிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிமுறைகளின்படி, சொந்த நிதியிலோ, CSR போன்ற இதர நிதியிலோ அரசு திட்டங்களான தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் நிதி உதவியுடனோ கட்டப்படும் அனைத்து தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட ஊக்குவிப்பவர் அதற்கான ஊக்கத்தொகை பெற தகுதியுடையவராவர்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தங்களுக்கு தொடர்புடைய கிராம ஊராட்சி பகுதிகளில் முழுமையான சுகாதாரத்தை அடைவதற்கும் கழிப்பறை பயன்பாட்டை கண்காணிப்பதற்கும், திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை ஒழிக்கும் முக்கிய பணிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளை விடா முயற்சியுடன் நிறைவேற்றவும், அவர்களது ஒருங்கிணைந்த செயல்பாட்டினை ஊக்கப்படுத்தவும், தகுந்த ஊக்கத் தொகை வழங்கப்படவேண்டும்.

எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்சமாக ரூ.300/– ஊக்கத்தொகை அனுமதிக்கலாம் எனவும் அத்தொகையினை கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு வங்கிக் கணக்குகளில் இரண்டு தவணைகளாக விடுவிக்கலாம் எனவும், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் முயற்சியில் கட்டப்பட்ட தனிநபர் இல்லக்கழிப்பறைகளுக்கு ஆறு மாத இடைவெளியிலும் மீண்டும் ஒரு வருட கால இடைவெளியிலும் பயன்பாட்டினை அறிந்து கொண்ட பின்பு இத்தொகையினை விடுவிக்கப்படலாம் என்றும் ஆலோசனை வழங்கியுள்ளார். மேலும், ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு நேர்முக தகவல் பரிமாற்ற செயல்முறைகளுக்கு மற்றும் இதர செலவினத்திற்காக ஒரு முறை ஒதுக்கீடாக ரூ. 10,000/– வழங்கலாம் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தினை தமிழ்நாட்டில் 2019–ம் ஆண்டு வரை செயல்படுத்த, திருத்தப்பட்ட திட்ட செயலாக்கத்தின்படி (Revised Project Implementation Plan) எதிர்பார்க்கப்படும் ஒதுக்கீடு பின்வருமாறு:

| திட்டக் கூறுகள் | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|
| தனிநபர் இல்லக் கழிப்பறைகள் | 4084.71 |
| திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை | 2203.41 |
| சமுதாய சுகாதார வளாகம் | 170.05 |
| தகவல் கல்வி மற்றும் தொடர்பு மற்றும் நிர்வாக செலவினம் | 489.57 |
| இதர திட்டக் கூறுகள் | 46.17 |
| **மொத்தம்** | **6993.91** |

**4.** எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகளை திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் அதன் உபயோகத்தை கண்காணித்தல் குறித்த வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை ஒப்புதல் அளிக்கவும், ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் பயன்பாட்டினை கண்காணித்தல் தூய்மை பாரத இயக்ககம் (ஊரகம்) திட்டத்தின் தகவல், கல்வி மற்றும் தொடர்பு இனத்தின்கீழ் மாவட்ட அளவிலான ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து பயன்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கிடவும், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளின்படி நேர்முக தகவல் பரிமாற்றத்திற்கு தொகை வழங்கவும் அரசிடம் அனுமதி கோரியுள்ளார்.

**5.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவை அரசு கவனமாக பரீசிலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவெடுத்து, தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகள், திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் உபயோகத்தை கண்காணித்தல் குறித்து இவ்வரசாணையில் இணைப்பு–1ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. தூய்மை பாரத இயக்க திட்ட தகவல், கல்வி மற்றும் தொடர்பு இனத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள நிதியிலிருந்து ஊக்கத்தொகை வழங்கவும், நேர்முக தகவல் பரிமாற்றத்திற்கான தொகையினை கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழிகாட்டு நெறிமுறைகளின்படி வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை – 15

அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை தவிர)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வழியாக)

அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,

(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15 வழியாக)

செயலாளர்,
ஊரக வளர்ச்சி அமைச்சகம், இந்திய அரசு, கிரிஷிபவன்,
புதுதில்லி– 110 001

செயலாளர்,
குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகம், இந்திய அரசு,
பர்யாவரன்பவன், புதுதில்லி

மாநில கணக்காயர், சென்னை–18

நகல்
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக
உதவியாளர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி , சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்), சென்னை–9

செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9

நிதி (ஊவ )துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (அ.ந.2) துறை, சென்னை–9

மாநில தகவல் மையம், சென்னை– 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**அரசாணை எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி-1) துறை, நாள்: 26.03.2015.**

**இணைப்பு**

**தனிநபர் இல்லக் கழிப்பறைப் பணிகளை திட்டமிட்டுதல், செயலாக்கம் மற்றும் அதன் உபயோகத்தை கண்காணித்தல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள்.**

**1. முன்னுரை:**

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே சிறப்பாக தமிழ்நாடு பெறவேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் முக்கிய நோக்கமாகும். திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தினை ஒழிக்க அனைத்து பங்கேற்பாளர்களையும் கொண்ட ஒரு மக்கள் இயக்கத்தின் பல்முனை அணுகுமுறையின் வாயிலாக, திறந்தவெளி மலம் கழித்தல் பழக்கம் அற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற்றப்படும். இந்த வழிகாட்டு நெறிமுறையின் நோக்கமானது கிராம ஊராட்சி அளவில் சுகாதார திட்டத்திற்கு மக்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்துதல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், ஊக்கத்தொகை அளித்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்கு செயல்திட்டமளித்தல் ஆகும்.

**2. குறிக்கோள்:**

2.1 திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கமற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்கும் பொருட்டு, ஊரகப் பகுதிகளில் சுகாதார திட்டத்தினை முடுக்கிவிடுதல்.

2.2 திட்ட பங்கேற்பாளர்களான ஊராட்சி அமைப்பின் பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள் போன்றவர்களை தீவிரமாக ஈடுபடுத்தி திறந்தவெளி மலம் கழித்தலை அறவே ஒழித்தல்.

2.3 தொடர் மனமாற்ற நடவடிக்கைகள்(Behavioural change) மூலம் நீடித்து நிலைத்த பாதுகாப்பான சுகாதார நடைமுறையை தொடர்ந்து பின்பற்ற செய்தல்.

**3. கிராம ஊராட்சி அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளை (Community Based Organisations) கண்டறிந்து பரிந்துரை செய்தல்:**

3.1 கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்றவை தங்களுடைய உள்ளார்ந்த (Inherent) இயல்பான தொடர் பணியின் காரணமாகவும் சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் இருப்பதால் கிராம சமூகத்தின் மீது அவர்கள் வலுவான செல்வாக்கு பெற்றுள்ளனர். தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர் கழிவறையை கட்டி பயன்படுத்திட, மக்களிடையே ஒன்றிணைந்த நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter–Personal Communication) மற்றும் தகவல் தொடர்பினால் அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே சமூகம் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தினை

ஏற்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர். அதனடிப்படையில், சுகாதார திட்டங்களை செயல்படுத்திட கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்திட அரசு முடிவெடுத்துள்ளது.

3.2 மாவட்ட ஆட்சித்தலைவர், கிராம ஊராட்சி அளவில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் **தனித்துவ வலிமை மற்றும் திறன்** ஆகியவற்றை ஆய்வு செய்தும் இது குறித்து திட்ட அலுவலர்(மகளிர் திட்டம்) / மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வு திட்டம்) ஆகியோருடன் கலந்தாலோசித்தும் மாவட்டத்தின் ஒவ்வொரு ஊராட்சியிலும் மேற்கண்ட இரு அமைப்பில் எந்த அமைப்பின் மூலம் சுகாதார மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்படும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.

3.3 மேற்கண்டவாறு, சமூகம் சார்ந்த சமூக அமைப்பு கண்டறியப்பட்டவுடன், அதன் உறுப்பினர்களுக்கு (அதாவது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு), வழிகாட்டு நெறிமுறைகளின் பின்வரும் பத்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அவர்களின் பங்களிப்பு மற்றும் பொறுப்பு குறித்து போதிய அளவிற்கு விழிப்புணர்வூட்டுவதோடு, அவ்வப்போது வெளியிடப்படும் நிர்வாக அறிவுரைகளை பின்பற்றிடவும் தெரிவிக்கப்பட வேண்டும்.

## 4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பணிகள்:

அ) கழிப்பறை இல்லாத வீடுகள் / பயன்பாட்டில் இல்லாத கழிப்பறைகள் குறித்த விவரங்கள் அடங்கிய **பதிவேட்டினை பராமரித்தல்** மற்றும் ஊராட்சி செயலரால், ஊராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் **முதன்மை பதிவேட்டினை** அவ்வப்போது மேம்படுத்திட (Updating) ஊராட்சி செயலருக்கு உதவுதல்.

ஆ) சுத்தம், சுகாதாரம், கழிப்பறை கட்டுதல் மற்றும் அதனை பயன்படுத்துதல் குறித்து **வீட்டுக்கு வீடு சென்று** விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

இ) கழிப்பறைகளை பயன்படுத்தாததால் ஏற்படும் அருவருப்பு மற்றும் அவமானம் குறித்தும் அதனால் ஏற்படும் **உடல் நலத் தீங்குகள்** குறித்தும் வீட்டில் குடியிருப்பவர்களிடம் எடுத்துரைத்தல்.

ஈ) கழிப்பறைகள் கட்ட **அரசு திட்டங்கள்** மூலம் அளிக்கப்படும் உதவித் தொகைகள் குறித்த புரிதலையும் அதனை பெற்றுத்தரவும், பயனாளிகளுக்கு **உதவுதல் மற்றும் பெற்றுத்தருதல்.**

உ) குக்கிராம அளவில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட ஒட்டுமொத்தமாக **திட்டமிடுதல், செயல்படுத்துதல்** மற்றும் அதன் **பயன்பாட்டினை கண்காணித்தல்.**

ஊ) தரமான **கட்டுமான பொருட்கள்** மற்றும் **திறன் வாய்ந்த கொத்தனார்கள்** கிடைக்க பயனாளிகளுக்கு உதவுதல்.

எ) உரிய நேரத்தில் **தாமதமின்றி பயனாளிகளுக்கு மானியம் விடுவிக்கப்படுவதை கண்காணித்தல்.**

ஏ) **அடிக்கடி தொடர்பு மற்றும் தொடர் பார்வையிடல்** மூலம் கழிப்பறை பயன்பாட்டினை உறுதி செய்தல்.

## 5. சமூக பயிற்றுநர்கள்(சுகாதாரம்)/சமூக வல்லுநர்கள்(சுகாதாரம்):

5.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு சுகாதார மேம்பாட்டு பணிகளில் அதன் அனைத்து உறுப்பினர்கள் மூலமாக ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமெனில் ஒரு சமூக பயிற்றுநரையும், புதுவாழ்வு திட்டமெனில், ஒரு சமூக வல்லுநரையும் இவர்கள் ஈடுபடுத்திக் கொள்ளலாம். சிறந்த ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மட்டுமின்றி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, தங்களின் சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகள் குறித்த அறிக்கை அளிக்க ஏதுவாக அவர்கள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருப்பவரை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும்.

**அ)** தேர்ந்தெடுப்பவரின் வீட்டில் கழிப்பறை இருக்க வேண்டும். அதோடு **பாதுகாப்பான சுகாதாரத்தை பேணுபவராக** இருக்க வேண்டும்.

ஆ) **ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / சுய உதவிக் குழுவில் உறுப்பினராக** இருத்தல் வேண்டும்.

இ) **அதே ஊராட்சியைச் சேர்ந்தவராக** இருத்தல் வேண்டும்.

ஈ) **குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு வரை** படித்தவராக இருத்தல் வேண்டும்.

உ) **சிறந்த தகவல் பரிமாற்றம் செலுத்திடும் திறன் படைத்தவராக** இருக்க வேண்டும்.

இதில், மேற்கண்ட தகுதிகளைக் கொண்டு, ஏற்கனவே, கிராம ஊராட்சிகளில் பணியாற்றும் ஊக்கமுள்ள மற்றும் பயிற்சிபெற்ற **வெற்றிகரமாக செயல்படும் சுகாதார தூதுவர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம்.**

5.2 **கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு** மேற்கண்ட தகுதிகளைக் கொண்டவரை சமூக பயிற்றுநர்(சுகாதாரம்)/சமூக வல்லுநர்கள்(சுகாதாரம்) ஆக ஈடுபடுத்துவதற்கு **தீர்மானம் இயற்ற வேண்டும்.** இச்செயல்பாடு, நியமனம் **கிராம சபையின் ஒப்புதலுக்கு** பின்னர் உறுதி செய்யப்படும்.

5.3 திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, திட்ட அலுவலர்(ம.தி), மாவட்ட திட்ட மேலாளர்(புதுவாழ்வு திட்டம்) அதன் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆகியோர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சுகாதார மேம்பாட்டு பணிகள் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது காலமுறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

5.4 வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) சமூக பயிற்றுநர் (சுகாதாரம்)/ சமூக வல்லுநர்(சுகாதாரம்) ஆகியோரின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய வேண்டும். அவர்களின் பணி முன்னேற்றம், பயனற்ற அளவிலும், போதுமானதாகவும் இல்லையெனில், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) தகுதியான மாற்று நபரை சுகாதார பணிகளில் ஈடுபடுத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பரிந்துரைக்க வேண்டும்.

5.5 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினால் ஈடுபடுத்தப்பட்ட சமூக பயிற்றுநர்கள்(சுகாதாரம்)/சமூக வல்லுநர்கள்(சுகாதாரம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணித்தள பொறுப்பாளர்கள் பங்களிப்பு மற்றும் பொறுப்புகள் குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தனியாக அறிவுரைகள் வழங்கப்படும்.

## 6. திறன் மேம்பாடு:

6.1 மாவட்ட ஆட்சியர் ஒவ்வொரு ஆண்டும் திறன் கட்டமைப்பு திட்டம் தயாரித்து, சமூக பயிற்றுநர்கள்(சுகாதாரம்)/சமூக வல்லுநர்கள்(சுகாதாரம்), பணித்தள பொறுப்பாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறையைச் சார்ந்த களப்பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர் போன்றோருக்கு சுகாதார மேம்பாடு பயிற்சியளிக்க வேண்டும்.

6.2 திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர்(மகளிர் திட்டம்), மாநில திட்ட மேலாளர் (புதுவாழ்வு திட்டம்) ஆகியோர் சமூக பயிற்றுநர்(சுகாதாரம்), சமூக வல்லுநர்(சுகாதாரம்), பணித்தள பொறுப்பாளர்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியோரின் தகவல் கல்வி மற்றும் தொடர்பு (IEC) / நேர்முக தகவல் பரிமாற்ற (IPC) நடவடிக்கைகளுக்கு தேவையானவற்றை வழங்கிட வேண்டும்.

6.3 இதற்கான நிதித் தேவை, தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) தகவல், கல்வி தொடர்புக்கான மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து மேற்கொள்ளலாம்.

## 7. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நேர்முக தகவல் பரிமாற்றத்திற்கான (IPC) நிதி ஒதுக்கீடு:

7.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியற்றை கிராம ஊராட்சிகளின் ஆதரவு அமைப்புகளாக நியமனம் செய்யப்பட்டவுடன், தூய்மை பாரத இயக்கத்தின் தகவல், கல்வி, தொடர்புக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து, மாவட்ட ஆட்சியர், நேர்முக தகவல் பரிமாற்ற ஒதுக்கீடாக ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சேமிப்பு கணக்கிற்கும் ரூ.10,000/- நிதி விடுவிக்க வேண்டும்.

7.2 இந்த நிதியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் / சமூக பயிற்றுநர்கள் (சுகாதாரம்) / சமூக வல்லுநர்கள் (சுகாதாரம்) ஆகியோரின் தூண்டுதல் (Triggering) மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பிட தேவை உருவாக்குதல் (Demand generation) போன்ற தகவல் பரிமாற்றம் பணிகளுக்கான செலவினங்களுக்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## 8. முதன்மைப்பதிவேடு (Master Register) பராமரித்தல்:

8.1 **அடிப்படை கணக்கெடுப்பு புள்ளி விவரம் 2013**ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அடிப்படை கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் மூலம் ஊராட்சிகளில் குடும்ப அளவிலான கழிப்பறை வசதி மற்றும் கழிப்பறை கட்டப்பட வேண்டிய தேவை / அளவுகோல் கண்டறியப்பட்டுள்ளது.

8.2 ஊரக வளர்ச்சி இணையதளத்திலிருந்து (www.tnrd.gov.in) இதனை ஊராட்சி வாரியாக, வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பதிவிறக்கம் செய்து, அவற்றை குக்கிராமம் வாரியாக பிரித்து கிராம ஊராட்சிக்கு அளிக்க வேண்டும்.

8.3 மேற்கண்ட விவரங்கள் **தற்போதைய நிலவரப்படி கழிப்பறை இல்லாத வீடுகள்,** அதாவது அடிப்படை புள்ளி விவரக் கணக்கெடுப்பிற்கு பின்னர் கழிப்பறை கட்ட அனுமதி அளிக்கப்பட்ட, கழிப்பறை கட்டப்பட்ட வீடுகளின் விவரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

8.4 இதனுடன் ஏற்கனவே 2013-ம் ஆண்டு கணக்கெடுப்பில் **விடுபட்டுப்போன வீட்டினை சேர்ப்பதற்கு அல்லது புதிய வீட்டினை சேர்ப்பதற்கு** அதற்கென வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறையினை பின்பற்ற வேண்டும். இவ்வாறு கூடுதாக சேர்க்கப்பட்ட குடும்பத்தாரின் விவரங்களை ஊரக வளர்ச்சி இணையதளத்திலிருந்து (www.tnrd.gov.in) எடுத்து வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) இதனை முதன்மை பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளும் பொருட்டு கிராம ஊராட்சிக்கு வழங்க வேண்டும்.

8.5 தனது **சொந்த நிதியிலிருந்து** / திட்ட நிதி அல்லாத வேறு நிதியில் கழிப்பறை கட்டிய குடும்பத்தினர் விவரங்களை சமூக பயிற்றுநர்(சுகாதாரம்) / சமூக வல்லுநர்(சுகாதாரம்) ஆகியோரின் உரிய **சான்றிற்கு பின்னர்** முதன்மை பதிவேட்டில் பதிவு மேற்கொள்ள வேண்டும்.

8.6 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட **குக்கிராமம் வாரியான முதன்மை பதிவேட்டினை** கிராம ஊராட்சி அலுவலகத்தில் பராமரிக்க வேண்டியது ஊராட்சி செயலரின் பொறுப்பாகும்.

## 9. திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிப்பதற்கான செயல் திட்டம்:

9.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, **தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட வேண்டிய குடும்பங்களின் விவரங்கள்,** அதனை செயல்படுத்துவற்கான செயல் திட்டம் மற்றும் திறந்தவெளி மலம் கழிப்பதை ஒழிப்பது ஆகியவை குறித்து அடுத்து வரும் கிராம சபையில் அளிக்கப்பட வேண்டும்.

9.2 இந்த செயல் திட்டத்தில் **பல்வேறு தரப்பினர் அதாவது ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள், அரசு / உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள்** ஆகியோர் சுகாதார பழக்க வழக்கத்தை பேணுவதற்கு, அவர்களை அணுகுவதற்கு மேற்கொள்ள வேண்டிய உத்திகளை தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும்.

9.3 **குடிநீர் இணைப்பு உள்ளவர்கள், வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்** முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்.

## 10. கழிப்பறை இல்லாத குடும்பத்தினரிடம் கழிப்பறையின் தேவையை உருவாக்குதல் :

10.1 கழிப்பறை இல்லாத குடும்பத்தினரிடம் கழிப்பறை தேவையை உணரவைக்காமல் கழிப்பறை கட்ட முயற்சித்தால் அம்முயற்சி உரிய பலனைத் தராது. எனவே, **கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் / சமூக பயிற்றுநர்(சுகாதாரம்) / சமூக வல்லுநர் (சுகாதாரம்)** ஆகியோரால் **வீட்டிற்கு வீடு மேற்கொள்ளப்படும் நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம்** அவர்களை ஊக்கப்படுத்தி கழிப்பறை கட்டுவதன் அவசியம் மற்றும் அதனை பயன்படுத்துவதன் அவசியத்தை உணர வைக்க வேண்டும்.

10.2 இதற்கு துணை புரியும் வகையில் பயனாளிகளிடம் தினசரி அடிப்படையில் பாதுகாப்பான சுகாதாரம் குறித்து கிராமத்தில் வசிக்கும் முக்கிய பிரமுகர்கள் /முக்கிய குழுக்கள்/ தினசரி தொடர்பில் உள்ள நபர்கள் மூலம் **தகவல்களை திரும்பத்திரும்ப வலியுறுத்த வேண்டும்.** எனவே, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் இதற்காக **பல்வேறு பங்கேற்பாளர்களான சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி செயலர், சமூக**

**பயிற்றுநர், சமூக வல்லுநர், மேல்நிலை நீர் தோக்க தொட்டி இயக்குபவர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணித்தள கண்காணிப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள்** போன்றோரை சுகாதார மேம்பாட்டு பணிகளுக்கான நேர்முக தகவல் (Inter Peronsal Communication) பரிமாற்ற பணிகளுக்காக அவர்களின் உதவியை நாடலாம்.

10.3 தற்போது **மாவட்ட / வட்டார அளவில் பிற துறைகளுடன் இணைந்து** மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்கள் ஏற்கனவே ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இது கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியற்றிற்கு துணை புரியும் வகையில் தொடர்ச்சியாக, முறையாக நடத்தப்பட வேண்டும்.

## 11. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட விண்ணபப்ப்படிவங்கள்:

11.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழில் வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை தனிநபர் இல்லக்கழிப்பறை கட்ட வேண்டிய குடும்பத்தினருக்கு அளிக்க வேண்டும். மேலும், இந்த படிவம் **அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களிலும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.** இந்த விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரின் அலைபேசி எண், ஆதார் அட்டை எண் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வேலை அட்டை எண் ஆகியவை பயனாளியை சுலபமாக அடையாளம் காணும் பொருட்டும், தொடர்ந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும், குறிப்பிடும் வகையில் அமைய வேண்டும்.

11.2 அனைத்து வேலை நாட்களிலும், பயனாளி கோரியவுடன் அளிக்கத்தக்க வகையில் ஊராட்சி செயலர் விண்ணப்பப் படிவத்தை தயார் நிலையில் வைத்திருந்து பூர்த்தி செய்த படிவத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

11.3 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியோரிடமிருந்து பெறப்படும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபங்களை பெற்றுக் கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது சம்மந்தப்பட்ட ஊராட்சி செயலரின் கடமையாகும்.

## 12. பயனாளிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்:

12.1முதன்மை பதிவேட்டின்படி விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவத்தினை ஊராட்சி செயலர் ஆய்வு செய்ய வேண்டும்.

12.2 விண்ணப்பதாரின் பெயர், கழிப்பறை இல்லாத வீடுகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் கிராம ஊராட்சியானது இதற்கான அனுமதியை திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) அல்லது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றிலிருந்து ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12.3 கிராம ஊராட்சியானது தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத தனிநபர் இல்லக் கழிப்பறைகளை கட்ட தனியார் பங்களிப்பு / நிறுவன சமூக

பொறுப்புணர்வு நிதியுதவி (Corporate Social Responsibility) மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதியைப் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12.4 ஒவ்வொரு குக்கிராமம் / தொகுப்பு ஆகியவற்றிலிருந்து பெறப்படும் 10-15 விண்ணப்பங்களை செயல்படுத்த ஒரே நேரத்தில் நடவடிக்கை மேற்கொண்டால் கீழ்கண்டவாறு பயனுள்ளதாக அமையும் :

அ) கட்டுமானப் பொருட்கள் மற்றும் கொத்தனார்களை ஈடுபடுத்த ஒருங்கிணைந்த முயற்சி மேற்கொள்ளுதல்.

ஆ) கட்டுமானத்தில் சிக்கனம் ஏற்படுத்தல்.

இ) தொழில்நுட்ப வல்லுநர்கள் கண்காணிப்பு மற்றும் தரமான கட்டுமானத்திற்கு வழிகோலுதல்.

ஈ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள பணித்தள கண்காணிப்பாளர்கள் மூலம் பயனுள்ள வகையில் கண்காணிப்பு மேற்கொள்ள இயலும்.

## 13. நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு:

13.1 மாவட்ட ஆட்சியரால், வட்டார வாரியாக தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட வேண்டிய எண்ணிக்கை மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு ஆகியவை குறித்து நிர்வாக அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

13.2 வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), கிராம ஊராட்சிகளில் அந்த ஆண்டில் கட்டப்பட வேண்டிய தனிநபர் இல்லக் கழிப்பறைகளை ஒதுக்கீடு செய்வார். கழிப்பறை கட்டுவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்த்து விரைவுபடுத்த ஏதுவாக கிராம ஊராட்சித் தலைவர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டுள்ள படிவத்தில் பயனாளிக்கு வேலை உத்தரவு அளிப்பார். இந்த வேலை உத்தரவு வழங்கியதில் இருந்து ஒரு வாரத்திற்குள் இதன் நகல் ஒன்றினை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)-க்கு அனுப்ப வேண்டும். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நிர்வாக செலவினத்திலிருந்து ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் தலா ரூ.50/- வீதம் இரண்டு புகைப்படங்கள் - தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கு முன்பு (கிராம ஊராட்சித் தலைவர்/துணைத் தலைவர்/வார்டு உறுப்பினர்/பணி மேற்பார்வையாளர் / சமூக பயிற்றுநர்(சுகாதாரம்)/ சமூக வல்லுநர்(சுகாதாரம்), இவர்களில் ஒருவருடன் பயனாளியின் புகைப்படம், மற்றொன்று கழிப்பறை கட்டி முடித்த பின்பு இதே முறையில் புகைப்படம் எடுக்கும் பொருட்டு விடுவிக்க வேண்டும். கிராம ஊராட்சி இந்த புகைப்படத்திற்கான செலவினத்தை மேற்கொள்ளும்.

13.3 பணிக்கான வேலை உத்தரவு கிடைத்தவுடன் ஊரக வளர்ச்சி இணைய தளத்தில் வட்டார அளவிலான அடிப்படை கணக்கெடுப்பு புள்ளி விவரத்துடன் இணைக்கும் பொருட்டு வேலை அடையாள எண் உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் இரட்டை பதிவு (Duplication) ஏற்படுவதை தவிர்க்கலாம்.

13.4 பயனாளிக்கு முதல் தவணை நிதி விடுவிப்பதற்கு முன்னர் பயனாளியின் தகுதி மற்றும் வேலை உத்தரவின் சரித்தன்மை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) சரிபார்க்க வேண்டும்.

## 14. தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகளை செயல்படுத்துதல்:

14.1 அடிப்படையில், ஒரு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் என்பது பூமிக்கடியில் அடித்தள கட்டுமானப்பணி, மேற்கட்டமைப்பு மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

14.2 வேலை உத்தரவு அதன் மாதிரி வடிவமைப்பு மற்றும் துண்டு பிரசுரம் ஆகியவை கழிப்பறை கட்டுமானம் மற்றும் பயன்பாட்டிற்காக சம்மந்தப்பட்ட பயனாளிக்கு வழங்கப்பட வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப பரிந்துரைக்கப்பட்ட மாதிரி வடிவமைப்பு தெரிவிக்கப்பட வேண்டும். மாதிரி வடிவமைப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் அனுப்பி வைக்கப்படும்.

14.3 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தனிநபர் இல்லக் கழிப்பறைகளுக்கு, தொடர்ச்சியாக எண்ணிடப்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறை தினக்கூலி பட்டியல் (NMR), பணித்தள கண்காணிப்பாளருக்கு வழங்கப்பட வேண்டும்.

14.4 கிராம ஊராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே பராமரிக்கப்படும் பதிவேட்டில் வேலை உத்தரவு அளித்தது குறித்த பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

14.5 பணி மேற்பார்வையாளர்கள் தங்களது தொகுதிக்குட்பட்ட பணிகளை தொடர்ச்சியாக பார்வையிட்டு அடையாளம் இட வேண்டும். வேலை உத்தரவு அளித்த ஒரு வாரத்திற்குள் பணியிடத்தை அடையாளம் (Marking) செய்ய வேண்டும். கிராம ஊராட்சியானது, கீழ்கண்ட ஏதாவது ஒருவருடன் பணி துவங்குவதற்கு முன்பும் மற்றும் பணி முடிவடைந்த பின்பும் பயனாளியின் புகைப்படம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

I) ஊராட்சித்தலைவர் II) துணைத்தலைவர் III) வார்டு உறுப்பினர் **IV)** பணி மேற்பார்வையாளர் V) சமூக பயிற்றுநர் (சுகாதாரம்) / சமூக வல்லுநர் (சுகாதாரம்). மேற்கண்ட புகைப்படம் எடுக்கப்படவில்லை எனில் நிதி விடுவிக்கப்படாது என்கின்ற விவரம் தெளிவாக பணி உத்தரவில் குறிப்பிடப்பட வேண்டும். இச்செயலானது ஏற்கனவே கட்டப்பட்ட கழிப்பறைகளுக்கு நிதி அளிப்பதை தடுக்க ஏதுவாகும்.

14.6 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு தகுதியான கொத்தனார் மற்றும் கட்டுமானப் பொருட்கள் ஆகியவை கிடைக்க உதவிபுரிய வேண்டும்.

14.7 உதவிப் பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் தனிநபர் இல்லக் கழிப்பறை பணியின் தரம் குறித்து கண்காணித்து தேவையான தொழில்நுட்ப வரையரைகள் பின்பற்றப்பட்டிருப்பதை அளிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

14.8. **சமூக பயிற்றுநர்(சுகாதாரம்)/சமூக வல்லுநர்(சுகாதாரம்)** ஆகியோர் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து பயனாளிக்கு உரிய ஆலோசனை வழங்க வேண்டும்.

## 15. மானியம் விடுவிப்பு:

15.1 தூய்மை பாரத இயக்கம்(கிராமம்)திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை அனுமதிக்கப்பட்டிருப்பின் பயனாளிக்கு இரண்டு கட்டமாக நிதி விடுவிக்கப்பட வேண்டும். **அடித்தளம் வரையிலான பணி முடிவுற்றவுடன்** முதல் கட்ட நிதி

விடுவிக்கப்பட வேண்டும். **கழிப்பறை பணி அனைத்தும் முடிவடைந்து பயன்பாட்டிற்கு ஏற்ற நிலையில் கட்டுமானப் பொருட்களுக்கான தொகையை பிடித்தம் செய்து கொண்டு இரண்டாவது கட்ட நிதியை** வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) பயனாளிக்கு விடுவிக்க வேண்டும். மேலும், ஏழை பயனாளிகளுக்கான சிரமத்தை குறைக்கும் வகையிலும் மற்றும் ஏற்கனவே முடிக்கப்பட்ட கழிப்பறைகளுக்கு போலியான கேட்புகளுக்கு நிதி விடுவிப்பதை தவிர்க்கும் பொருட்டும் பணி மேற்பார்வையாளர்கள் கண்டிப்பாக அடித்தளம் வரையிலான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு பகுதி நிதி விடுவிப்பதற்கு பரிந்துரைக்க வேண்டும். **வேலை முடிவடைந்த கழிப்பறை பணிகளுக்கு ஒரே தவணையில் நிதி கோரப்படும் எனில், உதவிப்பொறியாளர்/இளநிலை பொறியாளர் கண்டிப்பாக மேற்பார்வையிட்ட பின்னர்தான் நிதி விடுவிக்கப்பட வேண்டும்.**

15.2 அதே போன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறை அனுமதிக்கப்பட்டிருப்பின் **பணியின் மதிப்பீடு மற்றும் அளவீட்டிற்கேற்ப** ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.12,000/-க்கு மிகாமல் பயனாளிக்கு 2-தவணைகளில் நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

15.3 பணி மேற்பார்வையாளர்கள் சம்மந்தப்பட்ட பணியிடங்களை குறைந்தது **வாரத்திற்கு ஒரு முறை, வெள்ளிக்கிழமை** அன்று பார்வையிட்டு நடைபெற்று வரும் பணிகள் மற்றும் முடிவடைந்த பணிகளை மதிப்பிட வேண்டும். கழிப்பறை பணிகள் முடிவடைந்தவுடன் கிராம ஊராட்சி பயனாளியுடன் கழிப்பறைக்கருகில் கீழ்கண்ட ஐந்து நபர்களில் ஏதாவது ஒருவருடன் பயனாளியின் புகைப்படம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

I) ஊராட்சித்தலைவர் II) துணைத்தலைவர் III) வார்டு உறுப்பினர் **IV)** பணி மேற்பார்வையாளர் V) சமூக பயிற்றுநர் (சுகாதாரம்)/சமூக வல்லுநர்(சுகாதாரம்**). பணி மேற்பார்வையாளரின் மதிப்பீட்டுச் சான்றுடன் கண்டிப்பாக கழிப்பறை பணி துவங்குவதற்கு முன்பும், கழிப்பறை பணி நிறைவடைந்த பின்பும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணைக்கப்பட வேண்டும். 2-புகைப்படங்கள் இல்லாத கழிப்பறை பணிகளுக்கு இறுதி தவணை நிதி விடுவிக்கப்பட கூடாது.**

15.4 பணிமேற்பார்வையாளரின் மதிப்பீட்டுச் சான்றிதழ் ஆய்வு செய்யப்பட்ட பின்பு, ஊராட்சி செயலர் இதனை **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)-க்கு ஒப்படைத்து நிதி விடுவிப்பு ஆணை** மானியத்துடன் பயனாளியின் வங்கிக் கணக்கிற்கு ஒரு வாரத்திற்குள் **ECS**-மூலம் வழங்க தக்கவாறு விடுவிப்பு ஆணை வழங்க வேண்டும். **வட்டார அளவில் தூய்மை பாரத இயக்க திட்டத்திற்கென தனி வங்கிக் கணக்கு பராமரிக்க வேண்டும்.**

15.5. **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில்** செயல்படுத்தப்படும் பணி எனில் வேலை அட்டை வைத்துள்ளவர்களுக்கு **e-fms**-மூலம் தொகை வழங்கப்படவேண்டும்.

15.6 வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) பணியின் முன்னேற்றத்தினை இணைய தளத்தில் கண்காணித்து பணி அனுமதிக்கப்பட்டதிலிருந்து **3-மாதங்களுக்குள்** தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டி முடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

15.7 பணி அனுமதிக்கப்பட்டதிலிருந்து **3-மாதங்களுக்கு மேலாகியும்** பணிகள் முடிவடையவில்லையெனில், இதனை மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஆகியோர் ஆய்வு கூட்டங்களில் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். தொகுதி அலுவலர்கள் இப்பணிகளை கள ஆய்வு செய்து தாமதத்திற்கான காரணங்களை கண்டறிதல் வேண்டும்.

15.8 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், முடிவடைந்த பணிகளுக்கான பதிவுகளை **ஊரக வளர்ச்சி இணைய தளம் மற்றும் தொடர்புடைய இந்திய அரசின் இணைய தளங்களில்** மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

## 16. ஊக்க நிதி விடுவிப்பு:

16.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் (முழு சுகாதாரம் பேணுதல் மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை தொடர் உபயோகப்படுத்துதலை கண்காணித்தல் மூலமாக) / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கிராம ஊராட்சிப் பகுதிகளில் திறந்த வெளி மலம் கழித்தலை ஒழிக்கும் முக்கிய பணிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுகாதார பணிகளை மேற்கொண்டு அதன் பயன்பாட்டினை கண்காணிக்க வேண்டும். இதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு உகந்தவாறு ஊக்க நிதி அளித்து அவர்களுக்கான பணியை மேற்கொள்ள ஊக்கப்படுத்துதல் வேண்டும். ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதி **ரூ.300/-** ஆகும். இந்நிதி கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வங்கிக் கணக்கிற்கு விடுவிக்கப்பட வேண்டும். **கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு** ஆகியவற்றின் முயற்சியினால் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டப்பட்டு பயன்படுத்துவதை உறுதி செய்த பின்னர் இந்த ஊக்க நிதி இரண்டு தவணையாக விடுவிக்கப்பட வேண்டும். முதல் தவணையாக கழிப்பறை கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்த 6-மாதம் நிறைவடைந்த பின்னர் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு **ஒரு கழிப்பறைக்கு ரூ.200/-** வீதம் ஊக்க நிதி விடுவிக்கப்பட வேண்டும். மேலும், கழிப்பறை கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்து, ஒரு ஆண்டிற்கும் மேலாகி இருப்பின் **கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு இரண்டாவது தவணை நிதியாக ரூ.100/-ஐ விடுவிக்கலாம்.**

16.2 **01.04.2015-க்கு பின்னர் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட வேலை உத்தரவு** வழங்கப்பட்ட பணிகள் ஊக்கத் தொகை பெற தகுதி பெறும். 6-மாதங்கள் / 1-ஆண்டு கடந்த கழிப்பறை பணிகளுக்கு ஊக்கத் தொகை அளிப்பதற்கு பயனாளிக்கு இறுதி தவணைத் தொகை அளித்த தேதி அடிப்படையாக கொள்ளப்படும். (கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு ஊக்கத் தொகை விடுவிப்பது குறித்த வழிமுறைகள் கீழேவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

16.3 தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்) வழிகாட்டு நெறிமுறைகள், கழிப்பறைகள் கட்ட ஊக்கமளிக்கும் எவர் ஒருவருக்கும் ஊக்க நிதியளிக்க வகை செய்கிறது. எனவே, மேற்கூறப்பட்டுள்ளபடி அரசு திட்டங்களான தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) / மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலமாகவோ அல்லது இதர திட்டங்கள் அல்லது பயனாளியின் சொந்த நிதியில் கழிப்பறைகள் கட்டப்பட்டு இருப்பினும் ஊக்குநர்கள் ஊக்க நிதி பெற தகுதி பெறுவர். எனவே, மாவட்ட ஆட்சியர்கள் தூய்மை பாரத இயக்கம்(ஊரகம்) திட்டத்தின் தகவல் கல்வி மற்றும் தொடர்பு தலைப்பில் உள்ள நிதியிலிருந்து கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி இந்த ஊக்க நிதியினை வழங்கலாம்.

**16.4 வட்டார அளவிலான விருது & ஊக்க நிதிக்** குழுவில் உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஆ.தி.ந) மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறுசேமிப்பு) / வட்டார திட்ட மேலாளர்(தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) ஆகியோர் கழிப்பறைகள் கட்டி பயன்பாட்டிற்கு வந்த 6-மாதங்கள் மற்றும் ஒரு ஆண்டு கால அளவிற்கு மேலானவற்றிற்கு கிராம வறுமை ஒழிப்பு சங்கம்/ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ஊக்க நிதி விடுவிக்க ஆய்வு செய்து பரிந்துரைக்க வேண்டும்.

16.5 வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) இந்த ஊக்க நிதியினை கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் வங்கிக் கணக்கிற்கு ECS-மூலம் நிதி விடுவிக்க வேண்டும்.

16.6 வட்டார அளவிலான விருது மற்றும் ஊக்க நிதிக் குழு தனிநபர் இல்லக்கழிப்பறையின் பயன்பாடு குறித்து ஆய்வு செய்த பின்னர் ஒவ்வொரு கழிப்பறைக்கும் **2-வது மற்றும் இறுதி ஊக்க நிதியான** ரூ.100/- கிராம வறுமை ஒழிப்பு சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விடுவிக்கப்பட வேண்டும்.

## 17. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஊக்க நிதி பயன்பாடு:

17.1 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு இந்த ஊக்க நிதியின் ஒரு பகுதியினை உண்மையில் இப்பணியில் ஈடுபட்டு கழிப்பறைகள் கட்ட பயனாளியை ஊக்குவித்த அதன் உறுப்பினர்கள் / சமூக பயிற்றுநர் (சுகாதாரம்) / சமூக வல்லுநர்(சுகாதாரம்) ஆகியோருக்கு தீர்மானத்தின் அடிப்படையில் பிரித்து வழங்கலாம். இந்தத் தீர்மானம் ஊக்குநர்களுடைய செயல்பாடுகள் மற்றும் அவர்களுக்கான பாராட்டுதல்களையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.

17.2 மீதி உள்ள ஊக்க நிதியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கீழ்கண்ட பொது நலப்பணிகளுக்கு பயன்படுத்தலாம்.

- சுய உதவிக்குழுக்களுக்கிடையே உள்கடன் வழங்குதல்.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஆதார நிதி வழங்குதல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல்.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் / நலிவுற்றோருக்கு பொருளாதார கடன் உதவி அளித்தல்.

## 18. கண்காணிப்பு:

18.1 மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் முதன்மை கண்காணிப்பாளர் ஆவார். திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் அறிவுரைகளை பின்பற்றுவதற்கான பொறுப்பு அலுவலர் ஆவார். வட்டார வளர்ச்சி அலுவர்(கி.ஊ) தனிநபர் இல்லக் கழிப்பறைக்கான பயனாளிகளின் தகுதி, தரமான கட்டுமானம், உரிய காலத்தில் பணி முடித்தல் மற்றும் அதன் பயன்பாட்டை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாவார்.

### 18.2. ஆய்வு:

- உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் தங்களது பகுதியில் முடிக்கப்பட்டவற்றில் குறைந்தது 25% பணிகளை பார்வையிடுதல் மற்றும் ஒரே தவணையில் நிதி விடுவிக்க கோரும் அனைத்து தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகளையும் 100% பார்வையிட வேண்டும்.
- வட்டார வளர்ச்சி அலுவலர், முழுமையாக நிறைவடைந்த பணிகளில் குறைந்தது 15% கழிப்பறை பணிகளை பணிமேற்பார்வையாளரின் மதிப்பீட்டுச் சான்று மற்றும் புகைப்படத்துடன் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

- உதவி செயற்பொறியாளர்(ஊ.வ) மற்றும் செயற்பொறியாளர்(ஊ.வ) ஆகியோர் ஒவ்வொரு வட்டாரத்திற்கும குறைந்தது ஒரு மாதத்திற்கு 50 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் 15 தனி நபர் இல்லக் கழிப்பறைகளை முறையே ஆய்வு செய்து அனைத்து கழிப்பறைகளும் தொழில் நுட்பத் தேவையின் அடிப்படையில், கட்டப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

- திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஒவ்வொரு மாதமும் ஒரு வட்டாரத்திற்கு குறைந்தது 10-தனிநபர் இல்லக் கழிப்பறைகளை ஆய்வு செய்து அவைகள் வழிகாட்டு நெறிமுறைகள்படி கட்டப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

18.3 ஒவ்வொரு ஆண்டும் **ஏப்ரல் மாதத்தில்,** அதற்கு முந்தைய ஆண்டில் கட்டப்பட்ட அனைத்து கழிப்பறைகளும் (100 சதவீதம்) ஆய்வு செய்யப்பட வேண்டும். **இந்த மாதம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் ஆய்வு மாதம் என்று பெயரிடப்படும்.** மாவட்ட ஆட்சியர் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் ”வட்டாரங்களுக்கிடையே ஆய்வுக் குழுமூலம்” ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்வார்.

18.4 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரும் முடிக்கப்பட்ட தனிநபர் கழிவறைகளை கண்காணிக்கவும் மதிப்பிடவும் தனியான குழுக்களை ஏற்படுத்தலாம்.

18.5 கிராம சபையானது ஒட்டு மொத்த சமூக தணிக்கை குழுவாக செயல்பட்டு அனைத்து முடிவடைந்த கழிப்பறைகளின் பயன்படுத்துதலை உறுதி செய்யும். இது தவிர, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட சமூக தணிக்கைக் குழு மூலமாகவும், கட்டப்பட்ட கழிப்பறைகள் ஆய்வு செய்யப்படும்.

18.6 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் இவற்றை தொடர்ந்து கண்காணிக்க தேவையான நேர்முக தகவல் பரிமாற்றம் இருக்க வேண்டும். மேலும், இந்த பரிமாற்றத்திற்கு தேவையான பல்வேறு பங்கேற்பாளர்களின் உதவிகளை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கோரி பெறுவர்.

18.7. குடியிருப்பு வாரியான **சுகாதார மேம்பாட்டு அறிக்கை** ஊராட்சி செயலரால் **ஒவ்வொரு கிராம சபையிலும்** வைக்கப்படவேண்டும். அந்த அறிக்கை கழிப்பறைகள் கட்டி பயன்படுத்துபவர்கள் விவரம், கழிப்பறைகள் பயன்படுத்தாதவர்கள் விவரம், செயல் திட்ட அறிக்கையின்படி நடவடிக்கை மேற்கொண்ட விவரம் மற்றும் முடிக்கப்படாத பணிகளை முடிப்பதற்கான காலக்கெடு ஆகியவற்றை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

## 19. விருதுகள் மற்றும் வெகுமதிகள்:

19.1 **விருது மற்றும் ஊக்க நிதிக்குழுவில்** உள்ள துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஆ.தி.ந) மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(சிறுசேமிப்பு) / வட்டார திட்ட மேலாளர்(தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) ஆகியோர் காலாண்டிற்கொருமுறை (ஜனவரி, ஏப்ரல், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களின் முதல் வாரம்) கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதை ஆய்வு செய்ய வேண்டும். கழிப்பறைகள் தொடர்ந்து 6-மாதத்திற்கு மேல் மற்றும் ஒரு ஆண்டிற்கு மேல் பயன்படுத்தப்பட்டு வருமாயின் இந்த குழுவானது முதல் மற்றும் 2-வது தவணை ஊக்க நிதியினை கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விடுவிக்க பரிந்துரை செய்யலாம்.

19.2 ஊக்க நிதி வழங்கிய விவரம் அடுத்துவரும் கிராம சபை கூட்டத்தில் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

19.3 ஒரு குடியிருப்பானது எப்போது திறந்தவெளி மலம் கழிக்கப்படாத நிலையை அடைகிறதோ, அப்போது **கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு** அவர்களது பணியை அங்கீகரிக்கும் வகையில் **வட்டார அளவிலான விழாவில் மாவட்ட ஆட்சியரால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்** வழங்கலாம்.

19.4 அதே போன்று ஒரு ஊராட்சியானது திறந்தவெளி மலம் கழிக்கப்படாத நிலையை அடைந்து தொடர்ந்து ஒரு ஆண்டிற்கு மேலாக உள்ளதோ, அத்தகைய சம்பந்தப்பட்ட உள்ள கிராம ஊராட்சித் தலைவர், **சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம்** போன்ற முக்கியமான விழாக்களில் மாவட்ட ஆட்சியரால் உரிய முறையில் பாராட்டு பெற நடவடிக்கை எடுக்கலாம்.

19.5 **திறந்த வெளி மலம் கழித்தல் பழக்கம் அற்ற கிராம ஊராட்சிகளுக்கு** பல்வேறு திட்டங்களான விருப்ப நிதி, வறட்சி நிவார நிதி, ஒருங்கிணைந்த வருவாய் நிதி திட்டம் ஆகியவற்றின் கீழ் பணிகள் வழங்கிட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

19.6 திறந்த வெளி மலம் கழித்தல் பழக்கம் அற்ற கிராம ஊராட்சிகள், அந்த நிலையை தொடர்ந்து ஒரு ஆண்டிற்கு மேல் தொடரும் பட்சத்தில் அத்தகைய ஊராட்சிகளை **தூய்மை கிராம இயக்க விருது** - க்கு பரிந்துரைக்கலாம்.

19.7 சுகாதார பணியில் **சிறந்த களப்பணியாளர்களாக** விளங்கும் சமூக வல்லுநர்கள்(சுகாதாரம்), சுகாதார தூதுவர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணித்தள மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் போன்றோரும் மாவட்ட அளவிலான விழாக்களில் மாவட்ட ஆட்சியரின் பாராட்டுக் கடிதம் / சான்றிதழ் மூலம் பாராட்டப்பெறலாம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் ஆலோசித்து, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கு ஏற்ப திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்